# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

Calender :
Miscellaneous :
Preliminary Register : MC.17/2023
Sessions :
Deposition of Witness for : PW-1 Village:
Name : கற்பகம்
Taluk :
Father's/Husband's Name : அன்புதாஸ் Age : 28
Nationality : Indian Religion :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of** 16.12.2024.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

நான் இந்த வழக்கில் மனுதாரர் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7 ம் வகுப்பு படித்துள்ளேன். எனது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். எங்கள் திருமணம் எப்போது நடைபெற்றது என்றால் 04.06.2021 ம் தேதி நடைபெற்றது. திருமணத்திற்கு பிறகு எதிர்மனுதாரருடன் அவரது வீட்டில் 4 மாதங்கள் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் சரிதான். 4 மாதத்திற்கு பிறகு நான் கர்ப்பம் அடைந்தேன் என்றால் சரிதான். நான் கர்ப்பம் அடைந்த பிறகு திட்டச்சேரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பரிசோதனைக்கு சென்றேன் என்றால் சரிதான். ஆரம்பத்தில் எனது கணவர்தான் அழைத்து சென்றார். எதிர்மனுதாரர் வீட்டில் நாங்கள் கூட்டு குடும்பமாக வாழ்ந்தோம் என்றால் சரிதான். எனக்கு எந்த தேதியில் குழந்தை

பிறந்தது என்றால் 16.04.2022 ம் தேதி குழந்தை பிறந்தது.

2. எதிர்மனுதாரர் வீட்டில் நான், எனது மாமனார் , மாமியார் மற்றும் கொழுந்தனார் ஆகியோருடன் சேர்ந்து வாழ்ந்தபோது பிரச்சனை ஏதும் இல்லை என்றால் சின்ன சின்ன சண்டைகள் இருந்தது. எனது குழந்தையின் பெயர் ஆதினி ஆகும். குழந்தை பிறந்த பிறகு மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டு நேராக எதிரிமனுதாரர் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரியல்ல. எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றேன். எத்தனை நாட்கள் கழித்து எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்றேன் என்றால் அதிலிருந்து 16 நாட்கள் கழித்து சென்றேன். குழந்தைக்கு எனது பெற்றோர் வீட்டில் 16 ம் நாள் படைத்தார்களா என்றால் சரியல்ல. குழந்தைக்கு எனது பெற்றோர் வீட்டில் வைத்து 22 ம் நாள் படைத்தோம் என்றாலும் அப்போது எதிர்மனுதாரர் குழந்தைக்கு 5 பவுன் நகை போட்டார் என்றாலும் சரிதான்.

3. எதிர்மனுதாரர் என்னை அடித்து கொடுமைபடுத்தியதாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளித்தேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் என்னை அடித்ததாக கும்பகோணம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். எந்த தேதியில் அளித்தேன் என்று தேதி ஞாபகமில்லை. மேற்படி புகார் மனுவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி புகார் மனுவின்பேரில் காவல் நிலையத்தில் விசாரணை செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. அதன் பிறகு இந்த வழக்கினை எப்போது தாக்கல் செய்தேன் என்றால் சுமார் 6 மாதம் கழித்து தாக்கல் செய்தேன். மகளிர் காவல் நிலையத்தில் விசாரணை செய்து போலிசார் என்ன சொன்னார்கள் என்றால் இனிமேல் பிரச்சனை இல்லாமல் சேர்ந்து வாழ வேண்டும் என்று சொன்னார்கள். விசாரணைக்கு பிறகு எத்தனை மாதங்கள் நான் எதிர்மனுதாரர் வீட்டில் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் 8 மாதங்கள் சேர்ந்து வாழ்ந்தேன். எனது நிருபண

வாக்குமூலத்தில் திருமணத்திற்கு பிறகு சில நாட்கள் சேர்ந்து வாழ்ந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. எதிர்மனுதாரர் எனக்கு அறிவிப்பு ஒன்று அனுப்பினார் என்றால் சரிதான். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் என்ன பிரச்சனை என்றால் நான் மாமா வீட்டில் இருந்தபோது என்மீது சந்தேகப்பட்டார். எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்து அடித்ததாகவும் எனது மாமனார் மற்றும் மாமியார் என்னை அடித்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு சொந்தமாக வயல் உள்ளதா என்றால் உள்ளது. அது சம்மந்தமாக வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரருக்கு விவசாயத்திலிருந்து ரூ.40,000/- வருமானம் வருவதாக சொல்லி உள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரருக்கு கொத்தனார் வேலை மூலமாக மாதம் ரூ.25,000/- வருமானம் வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

5. எதிர்மனுதாரர் நான் அவருடன் வாழ்ந்த காலத்தில் என்னை நல்லபடியாக பராமரித்தார் என்றால் எனக்கு வேண்டியதை செய்து கொடுப்பார். ஆனால் திட்டிகொண்டே செய்து கொடுப்பார். எதிர்மனுதாரர் எனக்கு பிறந்தநாள், திருமணநாள், மற்றும் குழந்தையின் பிறந்த நாளின்போது என்னை வெளியே எங்கேயும் அழைத்து செல்வார் என்றால் இல்லை.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2024.12.16 16:49:06 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**